**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 25.09.2026

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**தமிழ்நாட்டில் 2026-ம் வருடத்திற்கான வடகிழக்குப் பருவமழை மாவட்ட அளவிலான முன்னறிவிப்பு**

தமிழ்நாட்டின் மாவட்ட அளவிலான 2026-ம் வருடத்திய வடகிழக்கு பருவமழை முன்னறிவிப்பு (அக்டோபர் முதல் டிசம்பர் வரை) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள பயிர் மேலாண்மை இயக்கத்தின் கீழ் இயங்கும் வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையத்தில் கணிக்கப்பட்டது. இதற்காக ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் பசிபிக் பெருங்கடலில் பூமத்தியரேகையை ஒட்டியுள்ள கடல் மேற்பரப்பு வெப்பநிலை மற்றும் தென்மண்டல காற்றழுத்த குறியீடு ஆகியவற்றை உபயோகித்து ஆஸ்திரேலிய ரெயின்மேன் (Australian Rainman International V.4.3 software) என்னும் கணிணி மென்பொருள் மூலம் இந்த முன்னறிவிப்பு உருவாக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் 2026ம் ஆண்டின் எதிர்பார்க்கப்படும் வடகிழக்கு பருவமழையளவு 468 மி.மீ ஆகும். இந்த மழையளவு அதன் நீண்ட கால சராசரி அளவான 464 மி.மீ ஒத்துள்ளது. தற்போது நிலவும் தென்மேற்கு பருவத்தில் 01.06.2026 முதல் 22.09.2026 வரையிலும் கிடைக்கப் பெற்ற மழையளவு (254 மி.மீ) நீண்டகால சராசரியை காட்டிலும் (292 மி.மீ) 13 சதவிகிதம் குறைவாக பெறப்பட்டுள்ளது. எதிர்பார்க்கப்படும் நீண்டகால சராசரியினை ஒத்த வடகிழக்கு பருவமழையால் இந்த பற்றாக்குறை ஓரளவு சரிசெய்யப்பட்டு மண் ஈரப்பதம் மேம்படுவதுடன் நீர்நிலைகளில் நீர் இருப்பும் மேம்பட்டு நிலத்தடி நீரும் உயர வாய்ப்புள்ளது. நிலவும் எல்நினோ நிகழ்வால் பருவமழை பரவலில் வேறுபாடு நிகழ வாய்ப்புள்ளது. கடலோர மாவட்டங்களில் புயலால் தொடர் மழை நாட்களும் உள்மாவட்டங்களில் தொடர் வறண்ட நாட்களும் பெற வாய்ப்புள்ளது.

வடகிழக்கு பருவமழையானது தமிழ்நாட்டின் ஆண்டு மொத்த மழை பொழிவில் 50 சதவிகிதம் பங்கு வகிப்பதால் வேளாண்மை மற்றும் நீர் மேலாண்மையில் முக்கிய பங்காற்றுகிறது. விவசாயிகள் அதிக மழை கிடைக்கப் பெறும் பொழுது அதிகப்படியான மழை நீரை பண்ணை குட்டைகளில் சேமித்து வறட்சி காலத்தில் நீர்ப்பாசனத்திற்கு உபயோகப்படுத்தலாம். மேலும் குறிப்பாக மானாவாரியில் பயிர் கழிவுகளை கொண்டு பயிர் மூடாக்கு செய்வதுடன் நீரைச் சேமிக்கும் நிலவடிவமைப்பு முறைகளைப் பின்பற்ற அறிவுறுத்தப்படுகிறது. நெற்பயிரில் காய்ச்சலும் பாய்ச்சலும் நீர் நிர்வாக முறையை மின்பற்றுவதன் மூலம் நீர் தேவையினை குறைக்கலாம். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் வழங்கும் வானிலை முன்னறிவிப்பு மற்றும் தானியங்கி வானிலை சார்ந்த வேளாண் அறிவுரையை கைபேசி செயலியினை மூலம் விதைத்தல், நீர்பாசனம் செய்தல் மற்றும் உரம் இடுதல் போன்ற பண்ணை முடிவுகளை எடுப்பதற்கு விவசாயிகள் பின்பற்ற கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். குறிப்பாக கனமழை மற்றும் புயல் சமயங்களில் இது மிக உதவியாக இருக்கும்

## தமிழ்நாட்டின் வடகிழக்கு பருவமழை முன்னறிவிப்பு - 2026

| வ.எண் | மாவட்டம் | சராசரி மழையளவு (மி.மீ) | எதிர்பார்க்கப்படும் மழையளவு (மி.மீ) | சதவிகித வேறுபாடு (%) |
|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 480 | 469 | -2 |
| 2 | செங்கல்பட்டு | 720 | 780 | 8 |
| 3 | சென்னை | 751 | 730 | -3 |
| 4 | கோயமுத்தூர் | 366 | 367 | 0 |
| 5 | கடலூர் | 647 | 626 | -3 |
| 6 | தர்மபுரி | 314 | 311 | -1 |
| 7 | திண்டுக்கல் | 400 | 400 | 0 |
| 8 | ஈரோடு | 314 | 304 | -3 |
| 9 | கள்ளக்குறிச்சி | 445 | 406 | -9 |
| 10 | காஞ்சிபுரம் | 651 | 635 | -2 |
| 11 | கன்னியாகுமரி | 501 | 524 | 5 |
| 12 | கரூர் | 298 | 284 | -5 |
| 13 | கிருஷ்ணகிரி | 285 | 260 | -9 |
| 14 | மதுரை | 422 | 393 | -7 |
| 15 | மயிலாடுதுறை | 910 | 991 | 9 |
| 16 | நாகபட்டிணம் | 849 | 864 | 2 |
| 17 | நாமக்கல் | 319 | 295 | -8 |
| 18 | பெரம்பலூர் | 422 | 400 | -5 |
| 19 | புதுக்கோட்டை | 403 | 368 | -9 |
| 20 | இராமநாதபுரம் | 481 | 462 | -4 |
| 21 | ராணிபேட்டை | 401 | 426 | 6 |
| 22 | சேலம் | 324 | 304 | -6 |
| 23 | சிவகங்கை | 412 | 389 | -6 |
| 24 | தஞ்சாவூர் | 487 | 458 | -6 |
| 25 | தேனி | 360 | 353 | -2 |
| 26 | தென்காசி | 462 | 446 | -3 |
| 27 | திருவள்ளூர் | 561 | 532 | -5 |
| 28 | திருவாரூர் | 653 | 6041 | -8 |
| 29 | தூத்துக்குடி | 404 | 392 | -3 |
| 30 | திருச்சிராப்பள்ளி | 376 | 349 | -7 |
| 31 | திருநெல்வேலி | 473 | 446 | -6 |
| 32 | திருப்பத்தூர் | 260 | 238 | -8 |
| 33 | திருப்பூர் | 328 | 306 | -7 |
| 34 | திருவண்ணாமலை | 475 | 446 | -6 |
| 35 | நீலகிரி | 451 | 444 | -2 |
| 36 | வேலூர் | 337 | 308 | -9 |
| 37 | விழுப்புரம் | 508 | 472 | -7 |
| 38 | விருதுநகர் | 399 | 365 | -9 |
| | தமிழ்நாடு | 434 | 438 | 1 |

**மக்கள் தொடர்பு அலுவலர்**